ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2047/43 - 2017 නොවැම්බර් මස 30 වැනි බ්‍රහස්පතින්දා - 2017.11.30

2047/43 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 30 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### மத்திய மாகாண மாகாண சபை

மத்திய மாகாண அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின்
சேவைப் பிரமாணக் குறிப்பு திருத்தம் - இலக்கம் 01

2014 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதிய 1869/4 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட மத்திய மாகாண அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பிற்கு பின்வரும் திருத்தங்களை மேற்கொள்வதற்கு மத்திய மாகாண கௌரவ ஆளுநர் அவர்கள் அனுமதி அளித்துள்ளார்.

1. பிரிவு 7.3.2.3. நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவு பதிலீடு செய்யப்படுகின்றது.

   7.3.2.3 அனுபவம் :
   உரிய திகதியன்று மத்திய மாகாண அரச சேவையில் நிரந்தர நியமனம் ஒன்றில் ஆகக்குறைந்த 05 வருட முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவையினைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டுமென்பதுடன், அது தொடர்பில் திணைக்களத் தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

   (இது தொடர்பாக வழங்கப்பட்டுள்ள விளங்கங்கள் அவ்வாறே தொடர்ந்திருக்கும்).

2. பிரிவு 7.3.2.5. இன் கீழ் தரப்பட்டுள்ள உப- பிரிவுகளின் இறுதியில் தொடர் இல. (iv) என பின்வரும் பிரிவு ஒன்று உள்ளடக்கப்படுகின்றது.

   7.3.2.5 ஏனையவை :
   (iv) உரிய திகதிக்கு உடன் முன்னரான 5 வருட காலத்தில் திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

3. பிரிவு 8.3 நீக்கப்பட்டு பின்வரும் பிரிவு பதிலீடு செய்யப்படுகின்றது.

   8.3 நடாத்தும் அதிகாரி : பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அல்லது மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவினால் அதிகாரம் வழங்கப்பட்ட நிறுவனம் ஒன்று.

4. பிரிவு 10.3.1.1 இன் உப பிரிவு (அ) (iii) நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவு பதிலீடு செய்யப்படுகின்றது.

   (iii) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டத்தினைப் பெற்று, சேவையில் 5 வருட முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவையினைப் பூர்த்தி செய்துள்ள அலுவலராக இருத்தல் வேண்டும்.

5. பிரிவு 10.3.1.2 நீக்கப்பட்டு அதற்கு பதிலாக பின்வரும் பிரிவு பதிலீடு செய்யப்படுகின்றது.

   10.3.1.2 தரமுயர்வு வழங்கும் முறை :
   அதியுயர் தரத்தில் காணப்படும் வெற்றிடங்களில் 50% ஆன நியமனங்கள் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை ஒன்றின் பெறுபேறுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும். மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை ஒன்றில் சித்தியடைவதற்காக


இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

அதன் ஒவ்வொரு பாடத்திலும் குறைந்த பட்சம் 40 புள்ளிகளைப் பெறல் வேண்டும். தகைமைபெறும் விண்ணப்பதாரர்களுக்கு மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைக் குழு ஒன்றின் மூலம் தகைமைகள் பரீட்சிக்கப்பட்டதன் பின்னர் நியமனங்கள் வழங்கப்படும். நேர்முகப் பரீட்சை விண்ணப்பதாரர்களின் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களை பரீட்சிப்பதற்காக மட்டுமே நடாத்தப்படுகின்றது. அதன் போது புள்ளிகள் வழங்கப்படமாட்டாது. (பாடத்திட்டமும் புள்ளி வழங்கும் நடைமுறையும் இணைப்பு 9 இல் தரப்பட்டுள்ளன.)

6. பிரிவு 10.3.2.2 நீக்கப்பட்டு அதற்கு பதிலாக பின்வரும் பிரிவு பதிலீடு செய்யப்படுகின்றது.

10.3.2.2 தரமுயர்வு வழங்கும் முறை :

அதியுயர் தரத்தில் காணப்படும் வெற்றிடங்களில் 50% ஆன நியமனங்கள் திறமை அடிப்படையில் நிரப்பப்படும். அதற்காக மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் சார்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் உளச்சார்புப் பரீட்சை ஒன்றிற்கு தோற்றி அதன் ஒவ்வொரு பாடத்திலும் குறைந்தபட்சம் 40 புள்ளிகளைப் பெற்று சித்தியடைதல் வேண்டும். அதன் பெறுபேறுகளின் அடிப்படையிலும் மற்றும் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் சபை ஒன்றினால் சேவை மூப்பு மற்றும் அனுபவம் என்பவற்றிற்கு வழங்கப்படும் மொத்தப் புள்ளிகளின் கூட்டுத் தொகையின் ஒழுங்கின் அடிப்படையிலும் முன்னுரிமை தீர்மானிக்கப்படும். ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் குழுவினால் நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சைக்கு விண்ணப்பதாரிகள் தோற்றுதல் வேண்டும். இந்நேர்முகப் பரீட்சைக்கு எவ்விதப் புள்ளிகளும் வழங்கப்படமாட்டாது. (இணைப்பு 10).

7. இணைப்பு 04 இன் கீழ் காட்டப்பட்டுள்ள "குறிப்பு" ப் பகுதிக்குப் பதிலாக பின்வரும் பகுதி உள்ளடக்கப்படுகின்றது.

**குறிப்பு 01**

மத்திய மாகாண அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவை தரம் III இற்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள அலுவலர்கள் அதன் கணினிப் பரீட்சையிலிருந்து விலக்களிக்கப்படுவார்கள்.

01. கீழ் குறிப்பிட்டுள்ள நிறுவனங்களிலிருந்து வழங்கப்படும், சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள கணினிப் பாடநெறியிலுள்ள பாடத்திட்டத்திற்கு ஒப்பான பாடத்திட்டத்தின் கீழ், கணினிப் பாடநெறியினைப் பூர்த்தி செய்துள்ள அலுவலர்கள்–

   a. இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் (SLIDA).
   b. தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை.
   c. தொழிற் பயிற்சி அதிகார சபை.
   d. தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் கீழுள்ள தொழிநுட்பக் கல்லூரி மற்றும் தொழில்நுட்பவியல் கல்லூரியினால் நடாத்தப்படும் பாடநெறி.
   e. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது வேறு நிறுவனம்.
   f. தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்.

02. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் இருந்து பெற்றுக்கொண்ட கணினியியல் பட்டம் அல்லது பட்டத்திற்காக கணினியியலினைப் பிரதான பாடமாகக் கொண்டு பயின்ற அலுவலர்கள்.

**குறிப்பு 02**:

இத்திருத்தங்கள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து 02 வருட காலம் வரை, இல. 1869/4 மற்றும் 2014.06.30 ஆந் திகதிய மத்திய மாகாண அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பின் இணைப்பு 04 இலுள்ள குறிப்பில் விதந்துரைத்துள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள அலுவலர்கள் கணினிப் பரீட்சையிலிருந்து விலக்களிக்கப்படுவார்கள்.

ஆர். எம். என். ரத்நாயக்க,
செயலாளர்,
மத்திய மாகாண சபை,
அரச சேவைகள் ஆணைக்குழு.

மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு,
இல. 244, கடுகஸ்தோட்ட வீதி,
கண்டி,
2017, ஒற்றோபர் 24.

12- 501

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.